


Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 348

திங்கட்கிழமை
10 நவம்பர் 2025

ஐப்பசி 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## தொல்லியல் ஆலோசனைக் குழுவில் சிறுபான்மையினர் புறக்கணிப்பு



கொழும்பு, நவம்பர் 10

தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் தொல்பொருளியல் ஆலோசனைக் குழுவுக்கு 19 பேர் அடங்கிய குழுவினர் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அந்தக் குழுவில் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த எவரும் உள்ளடக்கப்படவில்லை.

11

## உயர்தரப் பரீட்சை ஏற்பாடுகள் நிறைவு

### மோசடிகளைத் தடுக்க கடும் விதிகள்



கொழும்பு, நவ.10

இன்று ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. பரீட்சை மோசடிகளைத் தடுப்பதற்காகக் கடுமையான விதி முறைகள் அறிமுகப்படுத்தப்

11

## உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.10

2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இன்று திங்கட்கிழமை ஆரம்பமாக வுள்ளது.

நாடளாவிய ரீதியில் 2 ஆயிரத்து 362 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெற

11

## எடை குறைவுக் குழந்தைகள் இலங்கையில் அதிகரிப்பு!

விரிவு பக்கம்:- 05

## அரசாங்கத்தின்பாதீடு மக்களுக்கு 'வேட்டு'

முச்சந்தி முரளி

ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

விரிவு பக்கம்:- 02

### வத்தளையில்

## யாழ்.வாசிகள் இருவர் பிஸ்டலுடன் கைது!



கொழும்பு, நவ.10

வத்தளையில் கைத்துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரின் உத்தரவை மீறிப் பயணித்த கார் ஒன்றைத் துரத்திச்சென்று மடக்கிய பொலிஸார், அந்தக் காரைச் சோதனை செய்தபோது கைத்துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த ஆயுதங்கள் காரின் சாரதி இருக்கையின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

கைது செய்யப்பட்ட சாரதியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில்,

11

## புதிய திட்டத்தால் திறக்கப்படவுள்ள 30,000 கோப்புகள்

கொழும்பு, நவ.10

பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரியின் பதிவு வரம்பைக் குறைக்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் சுமார் 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் புதிய வரிக் கோப்புகள் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2026 பாதீட்டில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி ஆகியவற்றின் வருடாந்த வரம்பை 60 மில்லியன் ரூபாவிலிருந்து 36 மில்லியன் ரூபாவாகக் குறைப்பதற்கு

11

## யாழில் சுற்றிவளைப்பு; 23 பேர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், நவ.10

யாழ்ப்பாணத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளில் போதைப்பொருள்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 23 பேர்கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 17 வயதுடைய ஒருவர் போதை மாத்திரை

11

## வலிப்பு ஏற்பட்டு இளைஞர் மரணம்

யாழ்ப்பாணம், நவ.10

வலிப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கோப்பாயைச் சேர்ந்த சிவானந்தன் துவாரகன் (வயது-29) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 7ஆம் திகதி இவருக்கு வலிப்பு ஏற்பட்டுள்ளது. அதையடுத்து அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இவருக்கு சிகிச்சை

11

### வெளிநாடுகளில் பதுங்கியுள்ள

## 7 போதை வியாபாரிகள் சரணடையத் தயார்!






கொழும்பு, நவ.10

போதைப்பொருள்வியாபாரத்தை கைவிட்டு பாதுகாப்புத் தரப்பினரிடம் சரணடைவதற்குத் தயார் என்று வெளிநாடுகளில் பதுங்கியுள்ள 7 பேர் தெரியப்படுத்தியுள்ளனர் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

போதைப்பொருள் தொடர்பில் தகவல் வழங்குவதற்காக தொலைபேசி இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்

11

## மூச்சுத்திணறலால் இளம் யுவதி மரணம்

யாழ்ப்பாணம், நவ.10

மூச்சுத் திணறல் ஏற்பட்டு இளம் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் கிழக்கைச் சேர்ந்த பிரதீப் நிவேதா (வயது-24) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

நேற்று அதிகாலை அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. அதையடுத்து அம்புலன்ஸுக்கு உறவினர்கள் அறிவித்துள்ளனர். அம்புலன்ஸ் வந்த

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி: 09.11.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 4250
ஆங்கில எழுத்து: F
வெற்றி இலக்கங்கள்: 03 14 41 47
விசேட எழுத்து: F

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி: 09.11.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 1317
வெற்றி இலக்கினம்: துலாம்
வெற்றி இலக்கங்கள்: 03 25 27 59

**NLB ஜய**
திகதி: 09.11.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0276
ஆங்கில எழுத்து: S
வெற்றி இலக்கங்கள்: 4 0 7 9

**மெகா பவர்**
திகதி: 09.11.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 2356
ஆங்கில எழுத்து: J
சுப்பர் இலக்கம்: 26
வெற்றி இலக்கங்கள்: 09 10 44 65

**மஹஜன சம்பத**
திகதி: 09.11.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 6008
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கங்கள்: 8 8 4 2 6 0

**தன நிதானய**
திகதி: 09.11.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 2038
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கங்கள்: 06 09 15 68
விசேட எழுத்து: E

**சுப தவசக்**
திகதி: 09.11.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0124
வெற்றி இலக்கினம்: மீனம்
வெற்றி இலக்கங்கள்: 13 16 41

# அரசாங்கத்தின் பாதீடு மக்களுக்கு 'வேட்டு'

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு



**கொழும்பு, நவ. 10**
**அரசாங்கம் தாம் அளித்த அடிப்படைத் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியது மட்டுமல்லாமல், தமக்கு வாக்களித்த மக்களுக்கும் துரோகமிழைத்து 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை முன்வைத்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த பாதீட்டுத் திட்டத்தில் பல முரண்பாடுகள் இருக்கின்றன. கொள்கை ரீதியான விடயங்கள் ஒன்றுடன் ஒன்று முரண்படுகின்றன.

சுமார் 1 டிரில்லியன் ரூபா மதிப்புள்ள எதிர்பாராத பண உபரியுடன் திறைசேரி நிரம்பி வழிகிறது. இந்த எதிர்பாராத இலாபம் வாகன இறக்குமதி வரிகள் மூலம் கிடைத்தது.

இந்த 1 டிரில்லியன் ரூபா உபரியை மக்களுக்குச் சலுகை வழங்கப் பயன்படுத்தாமல், அரசாங்கம் வரிச்சுமையை அதிகரித்துவருகிறது. அவர்கள் மாதாந்திர வரம்பை 5 மில்லியன் ரூபாவிலிருந்து 3.6 மில்லியன் ரூபாவாகக் குறைத்து 'வற்' வலையமைப்பை விரிவுபடுத்தியுள்ளனர். இது சிறு வணிகங்களை நேரடியாகப் பாதிக்கிறது.

2027ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நடைமுறைக்கு வரும் ஒரு புதிய, பரந்த சொத்து வரியை இரகசியமாக அமுல்படுத்த அரசாங்கம் இணங்கியுள்ளது.

100 சதுர அடி வீட்டுக்கு 1 மில்லியன் ரூபா வீடமைப்பு வாக்குறுதிகள் ஒரு மோசமான நகைச்சுவையாகும். ஒரு சதுர அடி கட்டுமானச் செலவு 10,000 ரூபாவாக இருக்கும்போது, இந்த 1 மில்லியன் ரூபா ஒதுக்கீடு 100 சதுர அடி அமைப்பைக் கட்டுவதற்கு மட்டுமே போதுமானது. இது ஒரு வீடு அல்ல. இது ஓர் அவமானம்.

வரி இல்லாத வருமான வரம்பை 200,000 ரூபாவாக அதிகரிப்பதாக அளித்த வாக்குறுதி மீறப்பட்டது. நமது பொருளாதாரத்தின் உயிர்நாடியான நமது ஏற்றுமதியாளர்கள் நெருக்கடியில் உள்ளனர்.

இந்த வரவு- செலவுத் திட்டம் இளைஞர்கள், முதியவர்கள் மற்றும் நாட்டின் முக்கியமான பொருளாதார இயக்கிகளின் உண்மையான தேவைகளைப் பூர்த்திசெய்யத் தவறிவிட்டது- என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**
வெற்றி வாரம்: 0716
திகதி: 09.11.2025 தினம்: ஞாயிற்றுக்கிழமை
DLB
ஆங்கில எழுத்து: Z
வெற்றி இலக்கம்: 4 8 7 6 7 4

**Super Ball** DLB
திகதி: 09.11.2025 தினம்: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 2982
ஆங்கில எழுத்து: Z
வெற்றி இலக்கம்: 05 39 51 53

**சனிதா** DLB
திகதி: 09.11.2025 தினம்: ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து: L
வெற்றி இலக்கம்: 54 62 68 74
வெற்றி வாரம்: 5143

**SASIRI** DLB
திகதி: 09.11.2025 தினம்: ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 0812
வெற்றி இலக்கம்: 34 48 49

**லக்ன ராசி**
திகதி: 09.11.2025 தினம்: ஞாயிற்றுக்கிழமை
துலாம்
வெற்றி இலக்கம்: 05 16 47 58
சீட்டிழுப்பு வாரம்: 4694
DLB

**KAPRUKA** DLB
திகதி: 09.11.2025 தினம்: ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து: K
சுப்பர் இலக்கம்: 28
வெற்றி இலக்கம்: 51 62 72 75
வெற்றி வாரம்: 2158

**அத கோடிபதி** DLB
திகதி: 09.11.2025 தினம்: ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து: R
வெற்றி இலக்கம்: 23 34 55 71
வெற்றி வாரம்: 2808

# அஸ்வெசும நலத்திட்டம் இவ்வருடத்தில் மீளாய்வு

கொழும்பு, நவ. 10
நாட்டின் சமூக நலன் திட்டமான அஸ்வெசுமப் பயனாளிகளுக்கான வருடாந்திர தரவுப் புதுப்பித்தல் நடவடிக்கையை நலன்புரி நன்மைகள் சபை ஆரம்பித்துள்ளது.

2023ஆம் ஆண்டில் அஸ்வெசும உதவிகளைப் பெற்றுக்கொண்ட அல்லது அதற்குத் தகுதிவாய்ந்த குடும்பங்கள் மற்றும் தனிநபர்கள் அனைவரும் இந்தத் தரவுப் புதுப்பித்தலை முதல்முறையாகக் கட்டாயம் பூர்த்திசெய்யவேண்டும் என்று சபை அறிவித்துள்ளது.

எனினும், 2024ஆம் ஆண்டில் அஸ்வெசும குறித்துக் குறைபாடுகள் அல்லது மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள், அவர்களின் விவரங்கள் ஏற்கனவே சரிபார்க்கப்பட்டுள்ளதால், தகவல்களைப் புதுப்பிப்பது கட்டாயமில்லை. பயனாளிகள் தமது தகவல்களைப் புதுப்பிக்க https://eservices.wbb.gov.lk என்ற இணையத்தளத்துக்குச் சென்று QR அட்டையில் உள்ள குடும்ப எண் மற்றும் தேசிய அடையாள அட்டை எண்ணை உள்ளிட்டு, தரவுச் சரிபார்ப்பை நிறைவு செய்யலாம். அல்லது தமது கிராம உத்தியோகத்தர் ஊடாகவும் படிவங்களைச் சமர்ப்பிக்கலாம். (ச-இ)

# உயர்தரப் பரீட்சார்த்திகளுக்கு அவசர தொலைபேசி எண்கள்

கொழும்பு, நவ.10
உயர்தரப் பரீட்சைக் காலப்பகுதியில் எதிர்பாராத சம்பவங்களால் ஏற்படக்கூடிய இடையூறுகளைத் தடுப்பதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் பரீட்சைகள் திணைக்களம் ஆகியன இணைந்து விசேட திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியுள்ளன.

அதன்படி, அனர்த்தச் சூழ்நிலை காரணமாக பரீட்சார்த்திகளுக்கு ஏதேனும் இடையூறுகள் ஏற்பட்டால், 117 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அல்லது 1911 என்ற பரீட்சைகள் திணைக்களத் தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்கமுடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# தாதியர் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புப் பணி துரிதம்



கொழும்பு,நவ.10
தாதியர் கல்லூரிகளில் தாதியர் ஆசிரியர்களின் பற்றாக்குறை காரணமாக ஆட்சேர்ப்பைத் துரிதப்படுத்துமாறு விடயத்துடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு சுகாதார அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

தாதியர் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்ட தாதியர் ஆசிரியர்களின் எண்ணிக்கை 395 ஆகும். எனினும் தற்போது சுமார் 220பேர் மட்டுமே உள்ளனர். அதன்படி, மேலும் 175 தாதியர் ஆசிரியர்களுக்கான வெற்றிடம் நிலவுகின்றது.

அதன்படி, நிறுத்திவைக்கப்பட்டுள்ள தாதியர் ஆசிரியர் ஆட்சேர்ப்பை உடனடியாக ஆரம்பித்து, விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சைகளை அடுத்த இரண்டு மாதங்களுக்குள் நடத்தி ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு சுகாதார அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். (ச-இ)

# எதிர்க்கட்சிப் பேரணியில் விமல் கட்சி பங்கேற்காது



கொழும்பு, நவ. 10
நவம்பர் 21ஆம் திகதி எதிர்க்கட்சிகள் முன்னெடுக்கவுள்ள எதிர்ப்புப் பேரணியில் பங்கேற்கப் போவதில்லை எனத் தேசிய சுதந்திர முன்னணி அறிவித்துள்ளது. அதன் தலைவர் விமல் வீரவன்ஸ வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தொழிற்கல்வியில் இணைய '1966' தொடர்பாடல் சேவை

கொழும்பு,நவ. 10

**பாடசாலைக் கல்வியின் பின்னர் தொழிற்கல்வியில் இணைவதற்கான தகவல்களைப் பெறுவதற்கான அவசர தொடர்பாடல் சேவை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.**

அதன்படி '1966' தொழிற்கல்வி அவசர தொலைபேசிச் சேவை கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'1966' தொலைபேசிச் சேவையின்மூலம், தொழிற்கல்வி தொடர்பான எந்தவொரு தகவலையும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பெற்றுக்கொள்ளமுடியும்.

பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து தொழிற்கல்வியில் சேர மாணவர்களுக்குத் தேவையான தகவல்களைத் துல்லியமாகவும் திறமையாகவும் வழங்கும் நோக்கில் இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், தொழிற்கல்வி தொடர்பான எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளமுடியும். நாளைய தொழில் உலகத்தை வெற்றிகரமாக எதிர்கொள்ளத் தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை, மாற்றப்பட வேண்டிய பகுதிகளை மாற்றுவதன்மூலம், தயக்கமின்றி, தொழிற்கல்விக் கட்டமைப்பிற்குள் தரமான முறையில் மேம்படுத்தவேண்டும் எனப் பிரதமர் தெரிவித்தார். (ச-இ)

## தொல்பொருள் ஆலோசனைக்குழு புதிதாக நியமனம்

கொழும்பு, நவ.10

19 உறுப்பினர்களைக் கொண்ட புதிய தொல்பொருள் ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சர் ஹினிதும சுனில் செனவியினால் இதுதொடர்பான அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இந்தக்குழு 2025 மார்ச் 10ஆம் திகதி முதல் 2027 மார்ச் 9ஆம் திகதி வரை இரண்டு ஆண்டுகள் செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ரயில் கடவைக் காப்பாளர் கொடுப்பனவு அதிகரிப்பு

கொழும்பு,நவ. 10

புகையிரதக் கடவைக் காப்பாளர்களின் கொடுப்பனவை அதிகரிப்பதற்கு 250மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்வதற்கு 2026ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளில் அடிக்கடி ஏற்படும் விபத்துகள் காரணமாக வருடாந்தம் குறிப்பிடத்தக்க தொகையிலான உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.

இந்த நிலைமைக்குத் தீர்வாக கடவைக் காப்பாளர்களுக்குத் தற்போது எட்டு மணி நேரகக் கடமை நேரத்துக்கு மாதாந்தம் வழங்கப்படும் 7,500 ரூபாவை 15,000 ரூபா வரை அதிகரித்து வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கொட்டபொல கூட்டுறவுச்சங்க அதிகாரம் பெரமுன வசம்!

கொழும்பு, நவ.10

இலங்கையின் செழிப்புமிக்க கூட்டுறவுச்சங்கம் எனக் கருதப்படும் கொட்டபொல பல்நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் அதிகாரத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கைப்பற்றியுள்ளது.

100 உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 42 உறுப்பினர்களைப் பெற்று பெரும்பான்மையைக் கைப்பற்றியுள்ளது.

ஏனைய உறுப்பினர்களில், ஐக்கிய மக்கள் சக்தியின் 18 பேரும், தேசிய மக்கள் சக்தியின் 32 பேரும், ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் 4 பேரும் ஏனைய சிறு கட்சிகளின் 4 பேரும் வெற்றி பெற்றுள்ளனர்.

நூற்றுக்கணக்கான ஏக்கர் தேயிலை, தென்னந்தோட்டங்கள் மற்றும் பெரிய சொத்துகளைக் கொண்டுள்ள இந்தக் கூட்டுறவுச்சங்கத்தின் அதிகாரம் எதிர்க்கட்சிக்குச் சென்றதால், அரச தரப்பினர் பல்வேறு தந்திரங்களைப் பயன்படுத்தி அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள முயன்று வருவதாக பெரமுன உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்தார். (ச-இ)

வெளிநாட்டுப் பண அனுப்பல்

## இந்தாண்டு ஒக்ரோபரில் 712 மில்லியன் டொலர்

கொழும்பு, நவ.10

இலங்கை மத்திய வங்கியின் சமீபத்திய புள்ளிவிபரங்களின்படி, 2025 ஒக்ரோபரில் இலங்கைக்கு 712 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டுப் பணவனுப்பல் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 2025 ஜனவரி முதல் ஒக்ரோபர் வரையான 10 மாதங்களில் வெளிநாட்டுப் பணவனுப்பல் மூலம் 6.52 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இது கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியைவிட 20.1% அதிகரிப்பாகும்.

இந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் சுற்றுலா வருமானம் 2 பில்லியன் அமெரிக்க டொலரைக் கடந்துள்ளது.

இது 2024இன் முதல் ஒன்பது மாதங்களில் பதிவான 2.34 பில்லியன் அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் 5.3% அதிகரிப்பாகும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

## கனியிருப்பக்காய் கவர்ந்தற்று

சரஸ்வதி சபதம் எண்டொரு பழைய பக்திப்படத்தில, பிச்சையெடுக்கிற பொம்பிளை ஒராளுக்கு பட்டத்துயானை மாலை போட்டதால, அவா மகாராணியா மாறிடுவா. அதைமாதிரி இஞ்சையும் பிரதேசசபை மெம்பரா வரவே வாக்குமில்லாமல், வக்குமில்லாமல் இருந்த சிலர் எம்.பி.யாவும், அமைச்சராவும் மாறினதால என்னத்தைப் பேசுறது, என்னத்தைச் செய்யிறது எண்டு தெரியாமல் ததிங்கிணத்தோம் ஆடிக்கொண்டிருக்கினம். திண்ணையில படுத்திருந்தவனுக்குத் திடுக்கெண்டு கலியாணம் நடந்தமாதிரி, அவையள் தங்களுக்கும் இந்தப் பதவிக்கும் கொஞ்சமும் பொருத்தமில்லை எண்டதை நிரூபிச்சுக் கொண்டிருக்கினம். கடற்றொழில் அமைச்சரா இருக்கிறவர், கொஞ்சநாளைக்கு முதல் மேடையில ரி.ராஜேந்தர் மாதிரி மாறி, "இங்க இருக்கிற சண்டியர் எல்லாரையும் நொண்டியளாக்குவம்" எண்டு சபதம் போட்டார். சபதம் என்னவோ நல்லதுதான். ஆனால் அதுக்கு அவர் பாவிச்ச சொல்லுகள் தான் கடும் பிழை. மாற்றுத்திறனாளியளை அவையின்ர அங்கவீனங்களைச் சுட்டிக்காட்டி அவமானப்படுத்துறமாதிரியான சொல்லுகளைச் சனங்களே இப்ப கதைக்கிறேலை. ஆனால் பொறுப்பான ஒரு அமைச்சர் என்னடாவெண்டால், மேடையில எல்லாருக்கும் முன்னால இப்பிடி "நொண்டியள்" எண்டு சொல்லுறார். அவர் தெரிஞ்சுதான் சொல்லுறாரா இல்லாட்டில் தெரியாமல் சொல்லுறாரா எண்டு ஒருத்தருக்கும் தெரியேலை.

ஆனால் இப்பிடி மாற்றுத்திறனாளியள் எண்ட சொல்லு இருக்கத்தக்கதா, அமைச்சர் மட்டுமில்லை உந்தத் திசைகாட்டி அரசாங்கமும் அவையளைக் கேவலப்படுத்துறமாதிரித்தான் வேற சொல்லுகளைப் பாவிக்குது. அடுத்த வருச பட்ஜெட்டில மாற்றுத்திறனாளியளுக்கு மாதாமாதம் 10 ஆயிரம் ரூபாப்படி குடுக்கப்போகினம். அது நல்ல விசயம் தான், ஆனால் அதைச் சொல்லுறதுக்கு பட்ஜெட்டில தமிழில பாவிச்ச சொல்லு கடும் பிழை. "வலதுகுறைந்தோருக்கு" எண்டுதான் பட்ஜெட்டில மாற்றுத்திறனாளிகளைத் கன இடத்தில சொல்லுகினம். இது அரசாங்கத்தின்ர பிழையா? இல்லாட்டி பட்ஜெட்டை தமிழில் மொழிபெயர்த்தவையின்ர பிழையா? எண்டு சரிவரத் தெரியேலை. அநுர அலையோட எம்.பி.யா அள்ளுண்டு போன கனபேருக்கு சமூகம் பற்றின தெளிவில்லாததால, அவையள் ஆருந்தான் இப்பிடித் தமிழில 'வலதுகுறைஞ்சவை' எண்டு மாற்றுத்திறனாளியளுக்கு பட்டம் சூட்டி, சந்தோசப்பட்டிருப்பினம்.

அதை எண்பிக்கிறமாதிரித் திசைகாட்டியின்ர யாழ்ப்பாண எம்.பி. ஒருத்தர் தன்ர பேஸ்புக்கில பட்ஜெட் சலுகைகள் பற்றின பதிவுகள் போடேக்க, "வலதுகுறைஞ்சவைக்கு 10 ஆயிரம்" எண்டு போட்டு, முறையா வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கிறார். அந்த எம்.பி.க்கு மாற்றுத்திறனாளியளைப் பற்றியோ, அவையின்ர மனசைப் பற்றியோ அக்கறையில்லை. அவருக்கு நாலு இடத்துக்குப் போறதும், மாலை மரியாதையைக் கேட்டு வாங்கிறதும், அதைச் செல்பி எடுத்து பேஸ்புக்கில போடுறதும் காணும். அப்பிடிப்பட்டவருக்கு மாற்றுத்திறனாளி எண்ட நல்ல சொல்லைவிடவும் சொத்தி, நொண்டி, வலதுகுறைஞ்சவை எண்ட சொல்லுகள்தான் தெரிஞ்சிருக்கும்போல. கனியிருப்ப காய் கவருற ஆக்களையெல்லாம் எம்.பி.யாக்கினால் இப்பிடித் தாங்களும் கெட்டு, சனத்தையும் நாசமாக்கத்தானே செய்வினம்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahanaham.org

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். இளைய சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள்.

**இடபம்:** பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள்.சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச்செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. குடும்ப விஷயமாக முக்கியமான முடிவு எடுக்கவேண்டிய சூழ்நிலையில் குடும்பப் பெரியவர்களின் ஆலோசனை அவசியம்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். உறவினர்கள்மூலம் சுபநிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகும். சிலருக்கு வீண் அலைச்சல் ஏற்படவும் அதனால் உடல் அசதி உண்டாகவும் கூடும்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகமுடியும். வாழ்க்கைத்துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். சகோதரர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். வீட்டுப் பராமரிப்புப் பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள்.

**சிம்மம்:** தாய்வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். அவர்மூலம் உங்களுக்குத் தேவையான உதவிகளும் கிடைக்கும். தந்தையுடனும் தந்தைவழி உறவினர்களுடனும் தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும்.

**கன்னி:** சகோதரர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மாலையில் நீண்டநாள்களாக நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். பிற்பகலுக்குமேல் மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம்.

**துலாம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. ஆனால், சிலருக்கு அதிகப்படியான செலவுகளால் கடன் வாங்கநேரிடும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். கடன்கள் விஷயத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** மனதில் இனந்தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். ஆனால், நண்பர்கள் உங்கள் தேவையை அறிந்து செய்யும் உதவி ஆறுதல் தரும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தந்தைவழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். சிலருக்குத் திடீர்ப்பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். வெளியில் செல்லும்போது கவனமாக இருக்கவும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்குக் குடும்பம் தொடர்பான பணிகளுக்காக சற்று அலைச்சல் ஏற்படும். சிலருக்குத் தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பணலாபம் உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கடன்களில் ஒரு பகுதியைத் தந்து முடிக்கும் வாய்ப்பு ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.



## கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.10

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலாளர் எஸ்.சி.சத்தியசோதி, சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் ந.ஜெயரூபன், கௌரவ விருந்தினராக கொடிகாமம் ஹற்றன் தேசிய வங்கியின் முகாமையாளர் க.முகுந்தன், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச-159)

## மறுமலர்ச்சிக்காக வாசிப்பை நேசிப்போம்

### *சாவகச்சேரியில் பேரணி*

யாழ்ப்பாணம், நவ.10

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு 'மறுமலர்ச்சிக்காக வாசிப்போம்' எனும் தொனிப்பொருளிலான இறுதிநாள் நிகழ்வு சாவகச்சேரி நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. சாவகச்சேரி நகரசபையின் தவிசாளர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ப.பார்த்தீபன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ப.பரணிதரன் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது சாவகச்சேரி பேருந்து நிலையத்திலிருந்து பாடசாலை மாணவர்கள் வாசிப்பின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வுப் பேரணியாக மண்டபத்துக்கு வந்தனர். தொடர்ந்து வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்டபல்வேறுபட்ட போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. (ச-இ)



## இலவச நீரிழிவுப் பரிசோதனை யாழ்ப்பாணத்தில் புதனன்று

யாழ்ப்பாணம், நவ.10

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ். நீரிழிவுக் கழகம் நடத்தும் இலவச நீரிழிவுப் பரிசோதனை முகாம் யாழ்.போதனா மருத்துவமனைக்கு முன்பாகவுள்ள மதர்கெயர் மருத்துவமனை வளாகத்தில் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 9மணி முதல் மதியம் ஒரு மணி வரை இடம்பெறவுள்ளது.

நிகழ்வை மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் சுரேந்திரகுமாரன் ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

இதன்போது நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அழுத்தம், உடற்திணிவுச் சுட்டி, மருத்துவ ஆலோசனைகள் என்பன இடம்பெறவுள்ளன. இதில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ். நீரிழிவுக் கழகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-41)

## பச்சிலைப்பள்ளியில் உற்பத்திச் சந்தை!

கிளிநொச்சி,நவ.10

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தின் மாதிரிக் கிராம உற்பத்தியாளர்களின் வர்த்தகச் சந்தை இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பளை அஞ்சல் அலுவலகத்துக்கு அருகில் இடம்பெறவுள்ளது.

இங்கு மாகாணத் தொழிற்றுறைத் திணைக்கள அனுசரணையுடன் நடத்தப்படும் வர்த்தகச் சந்தை மற்றும் விற்பனைக்கூடங்கள் ஆகியவை திறந்துவைக்கப்படும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கிளிநொச்சி மாவட்டச் செயலக முதன்மைக் கணக்காளர் க. சி. கஜேந்திரன், சிறப்பு விருந்தினர்களாக மாகாணத் தொழிற்றுறைத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி க. துஷியா, கிளிநொச்சி மாவட்டச் செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அலகின் உதவிப் பணிப்பாளர் ச. சசீபன் ஆகியோர் கலந்துகொள்வர். (ச-ஒ)

## இராசமாணிக்கம் மறைவு; தமிழரசுக்கட்சி இரங்கல்!

கொழும்பு, நவ.10

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனின் தந்தை இராசமாணிக்கத்தின் மறைவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி இரங்கல் வெளியிட்டுள்ளது. இத் தக் கடினமான நேரத்தில் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர் மற்றும் அனைவருக்கும் எமது கட்சியின் சார்பாகவும் நலன்விரும்பிகள் சார்பாகவும் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆன்மா இறைவனடி சேரப் பிரார்த்திக்கின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



## வரலாற்றுச் சந்தர்ப்பம்!

தமிழகத்தில் நீண்டகாலமாக அகதிகளாக வாழ்ந்துவரும் ஈழத்தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநரான ராமதாஸ். 'தனிப்பட்ட அரசியலைத் தவிர்த்துவிட்டு ஈழத்தமிழர்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பதற்கு வரலாற்றுச் சிறப்பான வாய்ப் பொன்று கனிந்துள்ளது' என்றும் அவர் இயம்பியிருக்கின்றார். ஈழத்தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்கவேண்டும் என்பதே தமிழக அரசியற் கட்சிகளின் - குறிப்பாக திராவிடக்கட்சிகளின்- நிலைப்பாடாகக் காணப்படுகின்றது. ஆனால், அண்மைக்காலமாக அந்தக் கட்சிகள் வெவ்வேறு கோணங்களில் - பல்வேறு முனைகளில் - தனிப்பட்ட அரசியல் நலன்களை முன்னிறுத்திச் செயற்பட்டுவரும் நிலையில், காலச்சூழல் கருதி தனது கோரிக்கையை முன்வைத்துள்ளார் ராமதாஸ்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கு இன்னும் ஒருசில மாதங்களே மீதமிருக்கின்றன. இதைமுன்னிட்டு, வாக்காளர் பட்டியல் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்குத் துணிந்திருக்கின்றது இந்தியத் தேர்தல் ஆணையம். அதாவது, தமிழகத்தை விட்டு வெளிமாநிலங்களுக்குச் சென்றவர்களை அந்தந்த மாநிலங்களுக்கு உரியவர்களாக கருதியும், தமிழகத்தில் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்துவரும் பிஹாரிகள், குஜராத்திகளுக்கு தமிழகத்தில் வாக்குரிமை வழங்கும் வகையிலும் இந்த மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது. இவ்வாறான நிலையிலேயே, 30 வருடங்களுக்கும் மேலாகத் தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத்தமிழர்களுக்கும் வாக்குரிமை வழங்க வேண்டும் என்று ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

ஈழத்தமிழர்களுக்கு வாக்குரிமை என்பது தமிழகத்தின் பிரதான அரசியற் தொனிப் பொருளாக இருந்த காலங்களும் உள்ளன. அப்படிப்பட்ட கனதியான விடயம் ஒன்றுக்காகப் பேரம் பேசக்கூடிய சந்தர்ப்பம் தற்போது வாய்த்துள்ளது. எனவே, திராவிடக்கட்சிகள், குறிப்பாக ஆளும் தி.மு.க. அரசாங்கம் இந்த விடயத்தில் முன்னின்று செயற்படவேண்டும். தமிழகத்தில் வாக்காளர் பட்டியலை மாற்றியமைத்தால் இனப்பரம்பல் மாற்றப்படும். அதன்மூலம் பா.ஜ.க. ஊடுருவுவதற்குச் சாத்தியங்கள் ஏற்படும் என்று தி.மு.க. வெளியிட்டுள்ள அச்சமும், அதை வைத்து அந்தக் கட்சி முன்னெடுக்கும் அரசியலும் ஏற்கத்தக்கதுதான். ஆனால், இந்தப் பரபரப்புக்கு மத்தியில் ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வொன்றை எட்டக்கூடிய ஏதுநிலைகளை தமிழக அரசு தவறவிடக்கூடாது.


தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்மீது பல்வேறுபட்ட அரசியல் விமர்சனங்கள் இருந்தாலும், தமிழகத்தில் ஆட்சியமைத்த காலம்முதல் இன்றுவரை அவருடைய பல நகர்வுகள் சில மிகக் காத்திரமானவையாக அமைந்திருக்கின்றன. ஈழத்துக்கும் தமிழகத்துக்கும் இடையிலான நீண்டதும் நெடியதுமான உறவில்- ஒரு வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தும் வகையில் ஸ்டாலினின் அரசியல்போக்கு நகர்ந்து செல்வது தனித்துத் தெரிகின்றது. ஸ்டாலினின் ஆட்சியில் உருவாக்கப்பட்ட 'அயலகத் தமிழர்கள் துறை' கூட ஈழத்தமிழர் நலன்களை மையப்படுத்தியதுதான். எனவே, இத்தகைய மாற்றங்களைப் பார்த்துப் பார்த்துச் செய்த முதல்வர் ஸ்டாலின், தானாகவே கனிந்து மடியில் வந்து வீழ்ந்திருக்கும் வாய்ப்பைத் தவற விட்டுவிடக்கூடாது. இதைத்தான் ராமதாஸும் கூறவிழைகின்றார்.

செய்தி : 021 493 0000.
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

மரநடுகை மாதம் (நவம்பர்)

"நீங்கள் வலிமை, பொறுமை ஆகியவற்றின் அருமையை உணர்வீர்களாயின் மரங்களின் சகவாசத்தை வரவேற்பீர்கள்."

—ஹால் போர்லாண்ட் (அமெரிக்க இயற்கையியலாளர்)—




## எடை குறைவுக் குழந்தைகள் இலங்கையில் அதிகரிப்பு!



**கொழும்பு,நவ.10**

**ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் எடை குறைவு 17 சதவீதமாக உயர்ந்துள்ளதாகக் குடும்ப சுகாதாரப் பணியகத்தின் ஊட்டச்சத்துத் தரவுகள் தெரிவித்துள்ளன.**

2024ஆம் ஆண்டில் 17 சதவீதமாகப் பதிவாகியுள்ளது. அதற்கு முன்னர் 2021மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் முறையே 12.2 சதவீதம் மற்றும் 15.3 சதவீதமாக இருந்தது. இருப்பினும், 2016 மற்றும் 2021க்கு இடையில் படிப்படியான வீழ்ச்சி காணப்பட்டது.

மேலும், ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே காணப்படும் உடல் மெலிவுப் பரவலில் ஏற்ற இறக்கங்கள் இருப்பதை இந்தத் தரவு சுட்டிக்காட்டுகிறது.

2016இல் 11.3 சதவீதமாக இருந்த உடல் மெலிவு வீதம், 8.2 சதவீதமாகக் குறைந்து, பின்னர் 2022 இல் மீண்டும் 10.1 சதவீதமாக உயர்ந்தது. இருப்பினும், 2024ஆம் ஆண்டளவில், இந்தச் சதவீதம் 9.3 சதவீதமாகக் குறைந்துள்ளது.

இதற்கிடையில், கடுமையான உடல் மெலிவு அல்லது கடுமையான தீவிர ஊட்டச்சத்துக் குறைபாடு கொண்ட ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் சதவீதமானது பல ஆண்டுகளாகப் படிப்படியாகக் குறைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## வனவளத் திணைக்களத்துக்கு 5 ஆயிரம் பேர் உள்ளீர்ப்பு

கொழும்பு,நவ.10


வனவளத்திணைக்களத்தின் நிரந்தர நியமனத்துக்கு அமைய 5 ஆயிரம் பேரை இணைத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் இதனைத் தெரிவித்துள்ளார். 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது அவர் இதனை தெரிவித்தார். (ச-இ)

## மின்னல் எச்சரிக்கை

கொழும்பு, நவ.10

பலத்த மின்னல் தாக்கம் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. வடமேல், ஊவா, மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும், அநுராதபுரம், மன்னார், அம்பாறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழை மற்றும் பலத்த மின்னல் தாக்கம் ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)





## சம்பத் மனம்பேரியின் வாகனங்கள் பறிமுதல்

கொழும்பு,நவ.10

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சம்பத் மனம்பேரிக்குச் சொந்தமானதாகக் கூறப்படும் பேருந்து, கார் மற்றும் ஒரு 'கப்' ரக வாகனம் என்பன பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மித்தெனியப் பகுதியில் உள்ள சம்பத் மனம்பேரியின் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையின் போது அவை மீட்கப்பட்டன.

மித்தெனிய தலாவப் பகுதியில் ஐஸ் போதைப் பொருளைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் அடங்கிய இரண்டு கொள்கலன்களை வைத்திருந்த சம்பவம் தொடர்பாக சம்பத் மனம்பேரி அண்மையில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## ஹெரோய்னுடன் ஐவர் கைது!

கொழும்பு, நவ.10

ஹெரோய்னுடன் ஐந்து சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஜயவர்த்தனபுர பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

அவர்களிடமிருந்து 5 கிலோ 416 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை
செவ்வாய்க்கிழமை - ஐப்பசி 25
11.11.2025
சுபநேரம் : 10.36 - 12.06
ராகுகாலம் : 03.06 - 04.36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக் கட்சியின் அழைப்பு இராஜதந்திர நடவடிக்கையே!

## அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், நவ.10**
**அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் இணைந்து செயற்படவருமாறு பிரதான தமிழ்க் கட்சி என்ற ரீதியில் தமிழரசுக்கட்சி அழைப்பு விடுத்திருப்பதன் பின்னணி தமிழரசுக் கட்சியின் மேலாதிக்கத்தின்கீழ் ஏனைய கட்சிகள் செயற்படவேண்டும் என்பதே. இங்கு சமத்துவமாகச் செயற்பட ஓர் அமைப்புப் பொறிமுறையை முதலில் ஏற்படுத்தவேண்டும்-இவ்வாறு அரசியல் ஆய்வாளரும், சட்டத்தரணியுமான சி.அ.யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.**


அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கடந்த மத்தியகுழுக் கூட்டத்தில் ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியோடு மட்டுமல்ல ஏனைய தமிழ்க்கட்சிகளுடனும் இணங்கிச் செயற்படப்போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது வரவேற்கப்பட வேண்டிய விடயமே.

எனினும் தமது நிலைப்பாட்டுக்கு இணங்கிவரும் கட்சிகளுடன் தாம் இணைந்து செயற்படத் தயார் எனத் தெரிவித்து ஒருவகையான நிபந்தனையையும் விதித்திருக்கின்றார்கள். பேசுவதற்கு முன்னர் நிபந்தனைகளை முன்வைப்பது ஒரு நாளும் பொருத்தப்பாடாக இருக்காது. தமிழரசுக்கட்சி பழைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் போன்ற ஒரு நிலைப்பாட்டை உருவாக்கவே யோசிக்கின்றது. தமிழரசுக் கட்சியின் மேலாதிக்கத்தின்கீழ் ஏனைய கட்சிகள் செயற்படவேண்டும் என்பதே அதன் நோக்கமாகும். இது ஒரு இராஜதந்திரச் செயற்பாடகவே இருக்கும்.

இன்றைக்கு வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை மூன்று கட்சிகளும் ஏறத்தாழ சமமான நிலையிலேதான் இருக்கின்றன.

மூன்று தரப்புகளும் சமத்துவமாக மதிக்கப்படவேண்டும். சமத்துவமாகச் செயற்பட ஒரு அமைப்புப் பொறிமுறை வேண்டும்.

தலைமை என்பதுகூட கூட்டுத்தலைமையாக இருக்கலாமேயொழிய தனித்தலைமையாக இருக்கமுடியாது. அமைப்புப் பொறிமுறையும் சமத்துவமும், கொள்கை நிலைப்பாடும் பேணப்படவேண்டும்- என்றார். (ச-இ)



தமிழ்மக்கள் கூட்டணியின்

# வலி. தென்மேற்குக் கிளை அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம்,நவ.10
தமிழ்மக்கள் கூட்டணியின் வலிகாமம் தென்மேற்குக்கிளை அலுவலகத் திறப்பு நிகழ்வு சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய் எனும் முகவரியில் தமிழ்மக்கள் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினரும், யாழ்.மாநகரசபையின் முன்னாள் முதல்வருமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம் பெற்றது.

நிகழ்வில் கட்சியின் வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை உறுப்பினர் ஜெ.வீரசிங்கம் கலந்து கொண்டு அலுவலகத்தைத் திறந்துவைத்தார். கிளை அலுவலகத்தின் பெயர்ப்பலகைகளும் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டன. நிகழ்வில் நல்லூர்ப் பிரதேசசபையின் தவிசாளர் பத்மநாதன் மயூரன், தமிழ்மக்கள் கூட்டணியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், கட்சியின் அமைப்பாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-66)

# இரகசியக் குறியீடுகளை பிறருக்குப் பகிராதீர்கள்!

வவுனியா,நவ.10
இணைய நிதிமோசடி தொடர்பான முறைப்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றன. எனவே எந்தச் சூழ்நிலையிலும் கணக்கு எண்கள், கடவுச்சொற்கள் மற்றும் 'ஓரிபி' குறியீடுகளை வெளியாள்களுடன் பகிர்ந்துகொள்ளக்கூடாது என்று பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த மோசடியில் ஈடுபடுபவர்கள் தனிநபர்களை ஏமாற்றி அவர்களின் கணக்கு எண்கள், கடவுச்சொற்கள், கியூஆர் குறியீடுகள் போன்ற இரகசியத் தகவல்களைப் பெறுவது கவனிக்கப்பட்டுள்ளது.

எனவே, இணையத்தைப் பயன்படுத்தும்போது இதுபோன்ற மோசடிகள் குறித்து விழிப்புடன் இருக்கவும். அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் போன்ற அரசாங்கத்தால் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து மட்டுமே வேலைவாய்ப்பு அல்லது கல்வி வாய்ப்புகளைப் பெறவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

# வவு. மத்தியஸ்தர் சபைகள் தற்காலிகமாக இடமாற்றம்

வவுனியா,நவ.10
உயர்தரப் பரீட்சை காரணமாக வவுனியா மத்தியஸ்தர் சபைகள் பிரதேச செயலகத்தில் செயற்படும் என நீதி அமைச்சின் மாவட்டப் பயிற்சி உத்தியோகத்தர் இ.விமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் இயங்கிவந்த மத்தியஸ்தர் சபை வவுனியாப் பிரதேச செயலக மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி முதல் மதியம் 1மணி வரை செயற்படும்.

அதுபோல் வவுனியா குடியிருப்பில் உள்ள இலங்கை திருச்சபை தமிழ்க் கலவன் (சீ.சீ.ரி.எம்.எஸ்.) பாடசாலையில் செயற்பட்டுவந்த வவுனியா மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர் சபை வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மதியம் 1 மணி வரை செயற்படும்.

எனவே, மத்தியஸ்தர் சபையால் அழைக்கப்பட்டவர்கள் மற்றும் முறைப்பாடு செய்யச் செல்பவர்கள் உயர்தரப்பரீட்சை முடியும் வரை பிரதேச செயலகத்துக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் சென்று ஆற்றுப்படுத்தல்களை மேற்கொள்ளமுடியும் என அவர் தெரிவித்தார். (ச-110)



# குருபூஜை

யாழ்ப்பாணம், நவ.10
சைவப்பிரகாசப் பேரவையின் ஏற்பாட்டில் நல்லூர் தேரடிச்சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்தக் குருபூஜை நிகழ்வு நல்லூரில் அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. விசேட அபிஷேக வழிபாடுகள், திருமுறைப் பாடல்கள் ஓதப்பட்டுத் தொடர்ந்து வலிகாமம் வலய ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சைவப்புலவர் சு.தேவமனோகரன் 'நோய் நீக்கம்' எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

நற்சிந்தனைப் பாடல்கள் பாடப்பட்டுத் தொடர்ந்து குருபூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. (ச-41-66)

# தேயிலை விலை அதிகரிப்பு

கொழும்பு,நவ.10
முதற்தர தேயிலையின் விலை 200 ரூபாவால் அதிகரித்துள்ளது என வர்த்தகர்கள் தெரிவித்தனர். இதுவரை கிலோ ஆயிரத்து 600 ரூபாவாக விற்கப்பட்ட தேயிலை ஆயிரத்து 800 ரூபாவாக அதிகரித்துள்ளது. தேயிலை உற்பத்திக்கு வழங்கப்பட்ட வரி மானியம் நிறுத்தப்பட்டதால் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று வர்த்தகர்கள் தெரிவித்தனர். (ச-9)

# குழு இசை

யாழ்ப்பாணம், நவ.10
சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் திருவாசகக் குயில் காரை.லீலாவதி இராசரத்தினம் குழுவினரின் குழு இசை நடைபெற்றது. (ச-41-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையை ஒழிக்கும் அரசு கஞ்சாச் செய்கைக்கு அனுமதி

## ஓமல்பே சோபித தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.10
அரசாங்கம் ஆறு நிறுவனங்களுக்கு கஞ்சா பயிரிட அனுமதி வழங்கி, அதற்காக 66 ஏக்கர் காணியை ஒதுக்கியுள்ளது என்று ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருளுக்கு அடிமையாதல் மற்றும் கடத்தலைத் தடுக்க தேசியத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கும்நிலையில் இது நடந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, போதைப் பொருள் கடத்தல் மற்றும் அடிமையாதலை தடுக்கத் திட்டமொன்றை மேற்கொண்டுள்ளார். இது எதிர்காலத் தலைமுறைகளுக்காக எடுக்கப்பட்ட பிரதான தீர்மானமாகும். ஆனால் 66 ஏக்கர் நிலம் ஆறு நிறுவனங்களுக்குக் கஞ்சா பயிரிட வழங்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)


## கண்ணீர் அஞ்சலி

### நடராஜசுந்தரம் ருக்குமணி

யாழ் போதனா வைத்தியசாலையில் விடுதி தாதிய சகோதரியாகி கடமையாற்றும் **திருமதி செந்தில்குமார் நந்தினி** அவர்களின் அன்புத் தாய் **நடராஜசுந்தரம் ருக்குமணி** அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(CS 59677) E

**தாதியர் நலன்புரிச் சங்கம்,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 . 06 . 1936 | 09 . 11 . 2025 |



### அருளானந்தம் மேரிமாகிறேட்
**(தொம்மினிக்கா)**

யாழ்ப்பாணம் செபஸ்ரியார் வீதியை பிறப்பிடமாகவும், இல 315 பாங்ஷால் வீதி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட அருளானந்தம் மேரிமாகிறேட் அவர்கள் நேற்று (09.11.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு (பரியாரி) - கெலன் (எலின்) தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - அக்னஸ் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அருளானந்தம் அவர்களின் பாசமிகு மனைவியும், மனோகரன் (பிரான்ஸ்), ரவீந்திரன் (பிரான்ஸ்), மாலினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், மேளின், வசந்தா, வினோ, லோயி, றிச்மன் ஆகியோரின் அன்பு மாமியாரும், மக்ஸ்வெல், சுஜீவன், லிடியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், காலஞ்சென்ற பிலிப்நேரி (சலேஸ்) அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அகஸ்ரின், விக்ரர், சிறில், தர்மரட்ணம் மற்றும் பேனாட், பற்றிக் செல்வரட்ணம், நவரட்ணம், மரியநாயகம், பிலிப்நேரிரெஜீனா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (10.11.2025) திங்கட் கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

(CS 59874) E

**தகவல்:**
**மாலினி - மகள் : 076 118 2666**
**மனோகரன் - மகன் : 0033 624 080747**
**ரவீந்திரன் - மகன் : 0033 783 620165**

## முதலாம் ஆண்டு பெருமூச்சு நினைவுகளுடன்!!

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 . 01 . 1971 | 23 . 10 . 2024 |



### அமரர் நடராஜா இராஜேஸ்வரன்

நீ பறக்க முடியாத அளவுக்கு
ஒருபோதும் உன் சிறகுகள்
நனையாது ...!! கனக்காது ..!!
சற்று உதறிக்கொள் ...
சிலுப்பிக்கொள் ...
மழை வந்தது போல் வெயிலும் வரும் !!

என்று உரம் தந்து, தன்னம்பிக்கைகளை எங்கள் மனங்களில் விதைத்து மரணத்தின் வருகையை எதிர்பார்த்திருந்த நாட்களை நாங்கள் மறப்போமா? வலிகளை வலியுடன் உன் நினைவுகளை சுமந்தவர்களாக நானும் அம்மாவும் தனிமையில் ஏங்கி நிற்கின்றோம். என்றும் எம்முடன், எம் உறவுகளின் உள்ளங்களில் என்றும் உயிர்ப்புடன் நீவீர் வாழ்கின்றீர்..!!

**இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க! ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**


**குறிப்பு:**
அமரர் நடராஜா இராயேஸ்வரனின் ஞாபகார்த்த நிகழ்வுகள் 11.11.2025 ம் திகதி செவ்வாய்க்கிழமை எமது இல்லத்திலும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வுகள் நாச்சிமார் கோவில் இராமநாதன் வீதியில் அமைந்திருக்கும் ராஜா கிறீம் ஹவுஸில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(CR 46251) E

**98, யாழ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 . 04 . 1959 | 08 . 11 . 2025 |



### முருகேசு நவரத்தினம்
**(ஓய்வுபெற்ற தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை ஊழியர்)**

வெள்ளிருவை அல்வாய் கிழக்கு அல்வாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு நவரத்தினம் அவர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை (08.11.2025) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், தவமலர்தேவியின் அன்புக் கணவரும், ஜாமினி (லண்டன்), வாஸ்கரன் (முகாமையாளர் ஆர்பிகோ இன்சூரன்ஸ் - நெல்லியடி), விச்சு (தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச்சபை ஊழியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிருபனின் (லண்டன்) பாசமிகு மாமனாரும், அஞ்சிகாவின் (லண்டன்) பேரனும் தவத்திரவியத்தின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.11.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 46259) E


**வெள்ளிருவை,**
**அல்வாய் கிழக்கு,**
**அல்வாய்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 817 1662, 077 831 6952**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிலிங்கோ லைவ் நிறுவனத்தின் பசுமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பளை வேம்பொடுகேணி சீ. சீ. த. க. பாடசாலைக்கு மரக் கன்றுகள் கடந்த வியாழக்கிழமை அன்பளிப்புச் செய்யப்பட்டன. (ச-25, 9)




## சிவில் பாதுகாப்புக் குழுவின் விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ.10

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிவில் பாதுகாப்புக்குழுவுக்கான விசேட கலந்துரையாடல் வட்டுக்கோட்டை தொழில்நுட்ப கல்லூரி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இதன்போது, "ஒவ்வொரு செயற்றிட்டம் ஆரம்பிக்கும்போதும் மேலதிகாரிகளின் உத்தரவின்பேரில் கூட்டங்களை மட்டும் நடத்துவதோடு நின்றுவிடாமல், மக்கள் கூறுகின்ற பிரச்சினைகளைப் பொலிஸார் தட்டிக் கழிக்காமல் தீர்க்க வேண்டும்" என்ற கோரிக்கையை சிவில் பாதுகாப்புக்குழுவினர் முன்வைத்தனர். கூட்டத்தில் ஊர்காவற்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி, பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் அமைப்பினர் கலந்துகொண்டனர். (ச-25,27)



## சூழலியல் செயற்றிட்டம் மன்னாரில் மதிப்பாய்வு

மன்னார், நவ.10

கண்டல் தாவர பராமரிப்பு, கழிவு முகாமைத்துவம் மற்றும் பனைவள முகாமைத்துவம் தொடர்பான விசேட கலந்துரையாடல் மன்னார் மாவட்டச் செயலாளர் க. கனகேஸ்வரன் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. ஜி.ஈ.எவ், எஸ்.ஜி.பி மற்றும் யு.என்.டி.பி ஆகியவற்றின் நிதியுதவியுடன் மன்னார்-கிளிநொச்சி வரையிலான சதுப்பு நிலங்களில் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைபெறும் சூழலியல் செயற்றிட்டங்கள் குறித்து மன்றத்தில் விரிவான கலந்துரையாடல் நடைபெற்றது. எம்.ஏ.ஆர்.ஆர், வீகேன், யு.எஸ்டி.எச், சோபகந்தா, எச்.டி.ஓ ஆகிய அமைப்புகள் செயற்படுத்தும் திட்டங் களின் முன்னேற்றம் குறித்தும் மதிப்பாய்வு செய்யப்பட்டது. (ச-25, 56)

## பரிசளிப்பு விழா

கிளிநொச்சி, நவ.10

வட்டக்கச்சி மத்திய கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா வட்டக்கச்சி மத்திய கல்லூரி அதிபர் பி.ரவீந்திரநாதன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி வைத்தார்.

நிகழ்வில் யாழ். கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் காயத்திரி கஜபதி ஆகியோரும் பங்கேற்றனர். (ச-113)



## அடுத்தாண்டில் எண்ணெய் வரி

கொழும்பு, நவ. 10

இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் மற்றும் பாம் எண்ணெய் மீதான சிறப்பு வரியை நீக்கி, அதற்குப் பதிலாக மதிப்புக் கூட்டப்பட்ட வரி உள்ளிட்ட பொது வரிக் கட்டமைப்பை 2026ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பித்து உரையாற்றியபோது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (ச-இ)


### சேவை நலன் பாராட்டு

Best Wishes



கடந்த 39 வருட காலமாக தாதிய சேவையில் இருந்து தாதிய பரிபாலகராக சேவையிலிருந்து இன்று (10.11.2025) ஓய்வுபெறும்

**திரு. தில்லையம்பலம் பஞ்சலிங்கநாதன்**

அவர்கள் ஓய்வு காலத்தில் நோய் நொடியின்றி சீரும் சிறப்புமாக வாழ யாழ் போதனா வைத்தியசாலை தாதியர் சமூகம் சார்பாக மனதார வாழ்த்துவதோடு எல்லாம் வல்ல இறைவனையும் பிரார்த்திக்கின்றோம்.

**தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை**
**யாழ்ப்பாணம்.**

### நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

**எரிபொருள் நிலைய டீசல் தாங்கி நிர்மானித்தலுக்கான கேள்வி கோரல்**

எமது சங்கத்திற்கு சொந்தமான எரிபொருள் நிலையத்திற்கு புதிய டீசல் தாங்கி நிர்மானிப்பதற்கான கேள்வி கோரப்படுகின்றது. தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்கள் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 5000/= பணமாக செலுத்தி கேள்வி கோரலுக்கான விண்ணப்ப படிவத்தினை பெற்று பூரணப்படுத்தி 27.11.2025 திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "தலைவர், நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், ஆடியபாதம் வீதி திருநெல்வேலி" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலதிக தகவல்களிற்கு அலுவலக நேரத்தில் தொலைபேசி இலக்கத்துடன் / நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

தலைவர்
நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி

தொ.இல
021 222 2143
021 222 2969

(CR 46256) E

### நாய்க்குட்டி தேவை

ஜேர்மன் சப்போட் ஆண் நாய்க்குட்டி தேவை.

077 659 0606

### வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

கல்வியங்காடு, டச்சு வீதியில் 2 பரப்பு 6 குழி வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு:
077 114 4219, 070 614 4219

(CS/59868) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
01 . 08 . 1938

மறைவு
09 . 10 . 2025

எமது குடும்பத் தலைவர்

### அமரர் Dr. நாகமுத்து சின்னத்தம்பி (RMO)

அவர்களது சிவபதப்பேறு குறித்த 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வும், அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இன்று (10.11.2025) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இராமநாதன் வீதியில் உள்ள ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது குடும்பத் தலைவர் அமரத்துவம் அடைந்தவேளை நேரில் வந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசி, முகநூல் மற்றும் பிற இலத்திரனியல் ஊடகங்களின் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாதைகள், மலர்வளையங்கள் மூலம் இறுதியஞ்சலி செலுத்தியோருக்கும் இன்னும் பல வழிகளில் ஆதரவளித்த அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**குறிப்பு: இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று, வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

**கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.**

**குடும்பத்தினர்.**

(CS 30710) A

## மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 08 . 1938



தோற்றம்
08 . 11 . 2025

### திருமதி சோதிப்பிள்ளை சிவலிங்கம்

தையிட்டி காங்கேசன்துறையை நிரந்தர வசிப்பிடமாகவும் உரும்பிராயினை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சோதிப்பிள்ளை சிவலிங்கம் அவர்கள் கார்த்திகை 08.11.2025 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்லையா சிவலிங்கம் (ஓய்வுபெற்ற மின்சார மேற்பார்வை யாளர்) அவர்களின் பாசமிகு மனைவியும், சிவகரன், ரஜனி, ரோகினி, சிவசங்கர், கருணாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வகுமாரி, சுதாகரன், காலஞ்சென்ற ஜெயசாந்தி, நில்மினி, ஆனந்தி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சாரங்கா, நிகாஷ், தேசி, காலஞ்சென்ற டினேஸ், டனிஸ், அனிஸ்கா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.11.2025) செவ்வாய்க்கிழமை உரும்பிராயிலுள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் நல்லடக்கம் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**பலாலி வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.**

**தகவல் :
குடும்பத்தினர்
077 8020 180**

(CS 30709) A

## மரண அறிவித்தல்



தோற்றம்
27.02.1956

மறைவு
09.11.2025

### பவானி ஞானசம்பந்தன்

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் மூளாயை வதிவிடமாகவும் கொண்ட பவானி ஞானசம்பந்தன் அவர்கள் நேற்று (09.11.2025) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணரட்ணம் - பூபதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், வன்னியநாதன் ஞானசம்பந்தனின் (ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், பெருந்தெருக்கள் திணைக்களம்) அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான வன்னியநாதன் - வரலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், ஐங்கரனின் (மக்கள் வங்கி, பிரதி முகாமை யாளர்) பாசமிகு தாயாரும், தேவகி (அபிவிருத்தி உத்தியோகத்தர் மோட்டார் போக்குவரத்து திணைக்களம், வட மாகாணம்) அவர்களின் அன்பான மாமியாரும், காலஞ்சென்ற ஜெயசுந்தரம், ஜெயேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரி யும், தாரணி, மோகனாம்பாள், வன்னியசுந்தரி, காலஞ்சென்ற ஞாணநந்தன், கேதாரகௌரி, ஞானசௌந்தரி, காலஞ்சென்ற ஞானசூரியர் ஆகியோரின் அன்பு மைத்துனியும், கோபினேஷ், திலக்ஷன், தர்சிகா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2025) திங்கட் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் ஆரம்பமாகி பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் :
கணவர், மகன்
மற்றும் குடும்பத்தினர்.
T.P: 077 691 4079
076 759 5408**

(CS 59878) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய மாற்றம் உருவாகும்போது விமர்சனங்கள் இயல்பானவையே!



## அடுத்தாண்டு கல்வி மறுசீரமைப்பு நிச்சயம் பிரதமர் ஹரிணி திட்டவட்டம்

**கொழும்பு, நவ.10**
**புதிய மாற்றத்துக்கான தீர்மானங்களை எடுக்கும்போது மாற்றுக்கருத்துகள் மற்றும் விமர்சனங்கள் தோற்றம் பெறுவது இயல்பானதே. அரசாங்கம் என்ற அடிப்படையில் தீர்மானங்களை எடுக்கவேண்டும். புதிய கல்வி மறுசீரமைப்பு அடுத்தாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும்.**

இவ்வாறு கல்வி அமைச்சரும், பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
புதிய தொழிற்றுறையை உருவாக்கும் வகையில் கல்விக்கொள்கை மறுசீரமைக்கப்படவேண்டும். நாட்டில் வேலையின்மைப் பிரச்சினைக்குக் கல்விக் கொள்கை ஒரு காரணியாக உள்ளது. இதற்குத் தீர்வாகவே புதிய கல்வி மறுசீரமைப்பை அறிமுகப்படுத்தத் தீர்மானித்தோம். புதிய கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் ஆசிரியர் மற்றும் அதிபர் தொழிற்சங்கங்களுடன் இந்த ஆண்டு முதல் பேச்சில் ஈடுபட்டுள்ளோம்.
தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கமுடியாது. தீர்மானங்களை செயற்படுத்த வேண்டும். பாடசாலைக் கற்பித்தல் நேரம் அதிகரிப்புத் தொடர்பில் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு, கல்வி அமைச்சினால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. புதிய கல்வி மறுசீரமைப்பு அடுத்தாண்டு முதல் அமுல்படுத்தப்படும். 16 தரங்களுக்குரிய புதிய பாடப்புத்தகங்கள் அச்சிடும் பணிகள் இந்த மாதம் இறுதிப் பகுதியளவில் நிறைவடையும் - என்றார். (ச-இ)

# வருமான வரி விவரத்திரட்டு சமர்ப்பிப்பதற்கு காலக்கெடு

கொழும்பு, நவ.10
2024/2025 மதிப்பீட்டு ஆண்டுக்கான வருமான வரி விவரத் திரட்டுகளை வருமான வரிக்குப் பதிவுசெய்துள்ள அனைத்து நபர்களும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக இணையவழியில் சமர்ப்பிப்பது கட்டாயமாகும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.
குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் வருமான வரி விவரத்திரட்டுகளைச் சமர்ப்பிக்கத் தவறும் நபர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்படும். மேலதிக தகவல்களுக்கு 1944 அல்லது www.ird.gov.lk என்ற இணையத்தளத்தைப் பார்வையிடலாம் அல்லது அருகில் உள்ள உள்நாட்டு இறைவரிப் பிராந்திய அலுவலகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளமுடியும் எனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# மக்களிடம் ஹீரோவாக மாற ஜனாதிபதி அநுர முயற்சி

## சாகர காரியவசம் கண்டுபிடிப்பு

நாட்டில் போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பாதாளக்குழுக்களின் செயற் பாடுகளை ஊக்குவித்துவிட்டு ஜனாதிபதி தற்போது மக்கள் மத்தியில் ஹீரோவாக மாறுவதற்குக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறார். போதைப்பொருள் ஒழிப்புக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
பாதாளக்குழுக்களைக் கைதுசெய்தல், போதைப்பொருள்களைக் கைப்பற்றல் பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது. போதைப்பொருள் ஒழிப்புக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளார்.
போதைப்பொருள் மற்றும் பாதாளக்குழுக்களை ஒழிப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். ஆனால் இந்த விடயத்தில் ஜனாதிபதியின் உண்மைத்தன்மை சந்தேகத்துக்கிடமாக உள்ளது. நாட்டில் போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பாதாளக் குழுக்களின் செயற்பாடுகளை ஊக்குவித்துவிட்டு ஜனாதிபதி தற்போது மக்கள் மத்தியில் ஹீரோவாக மாற கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறார் - என்றார். (எ-இ)

## மரண அறிவித்தல்



**அருளப்பு மரியப்பிள்ளை (அன்னமரியம்மா)**

போயிட்டியை பிறப்பிடமாகவும் இளவாலையை வதிவிடமாகவும் கொண்ட அருளப்பு மரியப்பிள்ளை அவர்கள் நேற்று (09.11.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கபிரியேல் மரியாப்பிள்ளை ஆனாசி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிங்கராஜாவின் சகோதரியும், மேரி அஞ்சலா, நீற்றா (அன்னபூரனி) யின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அருளப்புவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தங்கராசாவின் அன்புத் தாயுமாவார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (10.11.2025) திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு புனித நீற்றாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி நடைபெற்று, சேந்தாங்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**நீற்றாம்மாள் கோவிலடி**
**இளவாலை.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

# ரணில் - நாமல் இடையே முரண்பாடுகள் இல்லை!

## பொதுஜன பெரமுன தெரிவிப்பு

கொழும்பு, நவ.10
நுகேகொடை கூட்டம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வுக்கும், நாமல் ராஜபக்சவுக்கும் இடையில் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது என வெளியாகும் தகவல்களை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி நிராகரித்துள்ளது.
எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள அரசாங்கத்துக்கு எதிரான பேரணியில் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கக்கூடாது எனவும், மாறாக அவர் பங்கேற்றால் தான் வரப்போவதில்லை எனவும் நாமல் ராஜபக்ச குறிப்பிட்டார் எனத் தகவல் வெளியாகியிருந்தது. அதையடுத்தே அந்தக் கூட்டத்துக்கு முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அழைப்பு விடுக்கப்படாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் அறிவிப்பு விடுத்தார் எனவும் கூறப்படுகின்றது.
இதுதொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிவி சானகவிடம் கேள்வி எழுப்பப்பட்ட போது, அவர் அந்தத் தகவல்களை நிராகரித்துள்ளார். அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. ரணிலோ, மைத்திரியோ, நாமலோ எவரையும் பங்கேற்கவேண்டாம் என எவரும் கூறவில்லை. முதலாவது கூட்டத்துக்கு முன்னாள் ஜனாதிபதிகளை அழைப்பதில்லை என்ற முடிவை ஏற்பாட்டுக்குழுவே எடுத்தது. இது முதல் பேரணி தான், இத்துடன் அது நின்றுவிடப்போவதில்லை. அது தொடரும். அடுத்தடுத்து நடைபெறும் போராட்டங்களில் தலைவர்களை களமிறக்குவோம் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைக்கு அடிமையானோரின் மறுவாழ்வுக்காக ஆலோசகர்கள்

கொழும்பு, நவ.10

போதைப்பாவனைக்கு அடிமையாகியுள்ள இளைஞர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக, அவர்களுக்கான ஆலோசனைகளை வழங்க ஆலோசகர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இதற்காக சுமார் 300 பேருக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த மறுவாழ்வுத் திட்டத்துக்காக தொண்டர் சேவையாளர்களைக் கொண்ட ஆலோசகர்கள் பயன்படுத்தப்படவுள்ளனர்.

தற்போது 750 பேரைக் கொண்ட ஆலோசகர்களின் தொண்டர் சேவைக்குழு ஒன்று இதற்குத் தயாராக உள்ளது. இவர்களில் சுமார் 300 பேர் தேவைப்படும் நேரங்களில் மறுவாழ்வு நடவடிக்கைகளுக்காக ஆலோசனை வழங்க ஈடுபடுத்தப்படுவார்கள். இவர்களுக்குச் சில சலுகைகள் அல்லது கொடுப்பனவு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

போதைப்பொருளுக்கு அடிமையான இளைஞர்களில் ஒரு பகுதியினருக்கு மறுவாழ்வு அளிக்கப்படும். ஏனையவர்கள் அவர்களின் நிலையைப் பொறுத்து மருத்துவமனையில் சேர்க்கப்படுவார்கள். மறுவாழ்வு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படும் இளைஞர்களின் பெற்றோர் அழைக்கப்பட்டு, ஆலோசகர்களுடன் கலந்துரையாடிய பின்னரே மறுவாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்படும் - என்றார். (அ-எ-இ)

## யாழ். வாசிகள்...

பிறிதொரு நபருக்கு வழங்க அவற்றைக் கொண்டுசென்றதாக குறிப்பிட்டுள்ளார். அதையடுத்து வத்தளை, மாபொல பகுதியில் வைத்து மற்றொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இருவரும் 33 வயதுடையவர்கள். சந்தேகநபர்கள் கைத்துப்பாக்கியைப் பயன்படுத்தி மேற்கொள்ளவிருந்த குற்றங்கள் தொடர்பான தகவல்களைக் கண்டறிவதற்கு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-இ)

## உயர்தரப்...

யிட்டுள்ளனஎன்றுபரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.

இம்முறை உயர்தரப் பரீட்சைக்கு 3 இலட்சத்து 40 ஆயிரத்து 525 பரீட்சார்த்திகள் தகுதி பெற்றுள்ளனர். 2 இலட்சத்து 46 ஆயிரத்து 521 பாடசாலை பரீட்சார்த்திகளும், 94 ஆயிரத்து 4 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இதில் உள்ளடங்குகின்றனர்.

அனைத்து பரீட்சார்த்திகளும் பரீட்சை ஆரம்பமாகும் நேரத்துக்கு, ஒரு மணி நேரத்துக்கு முன்னதாகவே பரீட்சை நிலையங்களுக்கு வரவேண்டும். அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, பரீட்சை நடக்கும் முழுக் காலப்பகுதியிலும் பரீட்சார்த்திகளின் முகம் திறந்த நிலையில் இருக்கவேண்டும். அதேபோன்று காதுகளும் தெரியும்படி இருக்க வேண்டும். சில பரீட்சார்த்திகள் தற்போதுள்ள தகவல் தொடர்பு சாதனங்களை அணிந்து மோசடி செய்ய வாய்ப்புள்ளது. இத்தகைய பரீட்சை மோசடிகளைத் தவிர்ப்பதற்காகவே இந்த விதிகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன

பல்தேர்வு வினாப்பத்திரத்துக்கு விடையளிக்கும் போது, வினாப்பத்திரத்திலேயே விடைகள் குறிக்கப்படவேண்டும். எம்மால் வழங்கப்படும் விடைத்தாளில் குறிக்கப்பட்ட விடைகள் மட்டுமே விடைத்தாளாக ஏற்றுக்கொள்ளப்படும். நேரத்தை முகாமைத்துவம் செய்து, சரியான விடைத்தாளில் குறிக்கவேண்டும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## வலிப்பு...

கள் வழங்கப்பட்டு வந்தநிலையில், நேற்றுக்காலை உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## உயர்தரப் பரீட்சை இன்று...

வுள்ளது. வடக்கு மாகாணத்தில் 14 ஆயிரத்து 217 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 3 ஆயிரத்து 249 தனியார் பரீட்சார்த்திகளுமாக மொத்தமாக 17 ஆயிரத்து 466 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். வடக்கு மாகாணத்தில் 147 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது. (அ-எ-66)

## யாழில்...

களைவிற்பனைசெய்தகுற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்புகளிலேயே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 10 பேர் ஐஸ் போதைப்பொருளுடனும், 17 வயதுடையவர் உட்பட 9 பேர் போதைமாத்திரைகளுடனும், 4 பேர் ஹெரோய்ன் போதைப்பொருளுடனும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-எ-26-20)

## 7 போதை...

என. அவற்றின் மூலம் தகவல்கள் கிடைக்கின்றன.

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள 7 பேர் வெளிநாட்டில் இருந்து அழைப்பை ஏற்படுத்தியுள்ளனர். போதைப்பொருள் வியாபாரத்தில் இருந்து விலகி, சமூகத்தில் சிறந்த பிரஜையாக வாழ்வதற்கு வாய்ப்பொன்றை வழங்கவேண்டும் என்று அவர்கள்கோரிக்கைவிடுத்துள்ளனர். போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையின் ஓர் அங்கமாக போதைப்பொருள் வியாபாரத்தை கைவிட்டு, அரசாங்கத்திடம் சரணடைவதற்கு தயாராக இருப்பதாக அவர்கள் கூறியுள்ளனர். இது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. ஆயினும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. உரிய கலந்துரையாடலின் பின்னரே முடிவுகள் எடுக்கப்படும்-என்றார். (அ-எ-44)

## மூச்சுத்...

போது அந்த யுவதி ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்பது கண்டறியப்பட்டது.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## புதிய...

முன்மொழியப்பட்டுள்ளது. அதன்படி, வரி நிகரத்தின் கீழ் வணிக நிறுவனங்கள், ஒரு நாளைக்கு சராசரியாக ஒரு இலட்சம் ரூபாவை வருமானமாக ஈட்டுமானால், அவை இந்த வரிக்கு உட்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதும், அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி இந்த வரி விதிப்பு நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது நுகர்வோருக்கு சுமையை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற போதும், வர்த்தகர்கள், இந்த வரிச்சுமையை நுகர்வோரின் மீது சுமத்துவார்கள் என்று எதிர்பார்க்கவில்லை என்று உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சமூகப் பாதுகாப்பு வரி செலுத்துவதைத் தவிர்த்த வாகன இறக்குமதியாளர்களும் புதிய வரி நடவடிக்கைகளின் கீழ் வரி செலுத்த வேண்டியிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வாகனங்களை இறக்குமதிசெய்யும்போது அல்லது உற்பத்தி செய்து விற்பனை செய்யும்போது சமூகப் பாதுகாப்பு வரி வசூலிக்கப்படவுள்ளது. (அ-எ-இ)

## தொல்லியல்...

புத்தசாசனம், மதம் மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, தொல்பொருள் திணைக்களத்துக்கான புதிய ஆலோசனைக் குழுவை நியமித்து விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை கடந்த முதலாம் திகதி வெளியிட்டுள்ளார்.

இந்தக் குழு பௌத்த துறவிகள் மற்றும் பொதுமக்கள் ஆகிய தரப்பினரைக் கொண்ட 19 உறுப்பினர்களைக் கொண்ட குழுவாகும். இந்தக் குழுவில் தமிழ், முஸ்லிம் தரப்பில் எவரும் பெயரிடப்படவில்லை.

பொலநறுவை சொலொஸ்மஸ்தான ராஜமஹா விகாரையின் பிரதம விகாராதிபதியும், மஹா விகாரவம்ஷிக சியாமோபாலி மஹா நிகாயவின் அஸ்கிரி மஹா விகாரைப் பிரிவின் அனுநாயக்க தேரருமான வெண்டருவே தர்மகீர்த்தி ஸ்ரீ ரத்னபால உபாலி நாயக்க தேரர் இந்தக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வர்த்தமானி அறிவித்தலின்படி இந்தக் குழுவின் பதவிக்காலம் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10ஆம் திகதி முதல் 2027ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும்.

கடந்தகாலங்களில் தொல்பொருள் திணைக்களம் தொடர்பில் சிறுபான்மை மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி ஏற்பட்டிருந்தது. தொல்பொருள் திணைக்களம் தமிழ் பேசும் மக்கள் வாழும் இடங்களில் ஆய்வுகள் என்ற போர்வையில் பௌத்த மயமாக்கலை மேற்கொள்கின்றது என்ற கடுமையான குற்றச்சாட்டு தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

தமிழ் மக்களின் பூர்வீக வழிபாட்டிடங்கள் தொல்பொருள் அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் அபகரிக்கப்பட்டு, அவற்றை பௌத்த வரலாற்று இடங்கள் என்று அடையாளப்படுத்தப்படுத்தும் செயற்பாடுகளை தொல்பொருள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது என்று குற்றச்சாட்டும் உள்ளது. தொல்பொருள் திணைக்களத்தின் இவ்வாறான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி தமிழ் மக்கள் பல போராட்டங்களையும், சட்ட நடவடிக்கைகளையும் கடந்தகாலங்களில் முன்னெடுத்திருந்தனர்.

இந்தப் பின்னணியில் தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்துக்கு ஆலோசனைகளை வழங்கும் தொல்பொருளியல் ஆலோசனைக் குழுவில் சிறுபான்மை மக்களைச் சார்ந்த எவரும் உள்ளடக்கப்படாமை மக்கள் மத்தியில் பெரும் விசனத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் ஏற்கும் தீர்வை வழங்கினால் ஒன்றுபடலாம்

## சித்தார்த்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.10

தமிழ்மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கி அரசாங்கம் செல்லுமாயின், அதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ளுமாயின் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து எங்கள் நிலைப்பாட்டை முன்வைக்கத் தயாராகவிருக்கின்றோம் என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

சட்டத்துக்கும் கொள்கைகளுக்குமான யாழ்ப்பாணக் கற்கை நிலையத்தின் ஏற்பாட்டில் 'அரசியற் தீர்வும் பொறுப்புக் கூறலும்' எனும் தலைப்பிலான சிறப்புக் கருத்துரையும் கலந்துரையாடலும் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ்க் கட்சிகளிடையே தீர்வு விடயத்தில் ஏதோ பெரிய வேற்றுமைகள் காணப்படுகின்றன, அதனால் தான் தமிழ்மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமலேயே இருக்கின்றன என்ற அபிப்பிராயம் சிங்கள அரசியல் கட்சிகள், தலைமைகளால் பரப்பப்படுகின்றது. அது உண்மையல்ல. தமிழ் மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கி அரசாங்கம் செல்லுமாயின், அதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ளுமாயின் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து எங்கள் நிலைப்பாட்டை முன்வைக்கத் தயாராகவிருக்கின்றோம். ஆனால் தற்போதைய ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமான தீர்வை முன்வைப்பார்களா? என்பதே கேள்வியாகவுள்ளது.

முன்னர் நாங்கள் எல்லோருமே தமிழீழத்தைக் கேட்டே போராடினோம். விடுதலைப்புலிகளும் முழுமையாகத் தமிழீழத்தைக் கேட்டே போராடினார்கள். அந்தக் கோரிக்கைக்கு மாறாக எம் மத்தியில் பெரியளவில் எவருமே செயற்படவில்லை. 1977 ஆம் ஆண்டு தமிழ்மக்கள் ஒற்றுமையாகத் தனிநாட்டுக்காக வாக்களித்தார்கள். அதற்குப் பின்னரும், முன்னரும் பெரும்பான்மையான தமிழ்மக்கள் சமஷ்டித் தீர்வையே ஏற்றுக் கொண்டார்கள். தற்போதும் நாம் சமஷ்டி அடிப்படையிலான தீர்வையே கோரி வருகின்றோம். இது தொடர்பில் எங்களுக்குள் சிறு சிறு வேற்றுமைகள் காணப்பட்டாலும், அதை நாங்கள் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.

சர்வதேச நாடுகளின் முக்கியஸ்தர்கள், அமைப்புகளைச் சந்தித்துக் கலந்துரையாடும் போது தமிழ்க்கட்சிகள் தங்களுக்கிடையில் ஒற்றுமையில்லை என விசனம் தெரிவிப்பார்கள். தமிழ்மக்கள் தங்களுக்குள் பலமாகவிருப்பது முக்கியமானது. அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படும் வகையில் எங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். தமிழ்க் கட்சிகள் மத்தியில் பல விடயங்களில் பிரச்சினைகள் காணப்பட்டாலும் சில விடயங்களை நாம் தொடர்ந்தும் ஒற்றுமையாகவே முன்னெடுக்கின்றோம். ஈ.பி.டி.பி. கட்சியின் மகுடவாசகமாக மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி காணப்படுகின்றது. தமிழ்த்தேசியக் கட்சிகள் அனைத்துமே இந்த விடயத்தையே வலியுறுத்துகின்றன - என்றார். (எ-66)

## ஐஸ் போதையுடன் பெண் கைது

கிளிநொச்சி, நவ.10

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண போதைப் பொருள் ஒழிப்புப் பொலிஸ் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 45 வயது மதிக்கத்தக்கவர் என்றும், சந்தேகநபரிடம் இருந்து 7 கிராம் 750 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-113)

## மன்னார் மருத்துவமனையில் சிற்றுண்டிச்சாலை அசுத்தம்

### நகரசபை நடவடிக்கை

மன்னார், நவ.10

மன்னார் பொது மருத்துவமனையின் சிற்றுண்டிச்சாலை பல்வேறு சுகாதாரக் குறைபாடுகளுடன் இயங்கியநிலையில் அவற்றை நிவர்த்திசெய்யுறுமாறு மன்னார் நகரசபை அறிவுறுத்தி எச்சரித்துள்ளது.

குறித்த சிற்றுண்டிச்சாலையில் பல்வேறு சுகாதாரக்குறைபாடுகள் நிலவுவதாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மன்னார் நகரசபைச் சுகாதாரக் குழு உறுப்பினர்கள் மற்றும் நகரசபைச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையில் மருத்துவமனைக்குச் சென்று மேற்கொள்ளப்பட்ட ஆய்வுநடவடிக்கையின்போது பல்வேறு குறைபாடுகள் அடையாளங்காணப்பட்டன. கழிவுநீர், மலக்கழிவுகள் திறந்த பகுதியில் விடப்பட்டமை, அதிகளவான இலையான்கள், துர்நாற்றம், ஒழுங்கற்ற கழிவகற்றல், நுளம்புப் பெருக்கத்துக்குச் சாதகமான சூழல், உணவுப்பொருள்கள் ஒழுங்கான முறையில் களஞ்சியப்படுத்த படாமை, அழுக்கான சமையலறை, கழிப்பறைத் தொட்டிகள் மூடப்படாமை உள்ளடங்கலாகப் பல்வேறு குறைபாடுகள் இனங்காணப்பட்டன.





இந்தநிலையில் குறித்த சிற்றுண்டிச்சாலைக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்யப்படவுள்ளதுடன் மருத்துவமனை நிர்வாகத்துக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பாக கடிதமும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ச-56)



## போதைப்பொருள் ஒழிப்பு; மன்னாரில் விழிப்புணர்வு

மன்னார், நவ.10

தேசிய ஆபத்தான போதைப்பொருள் கட்டுப்பாட்டு சபை மற்றும் மன்னார் உயர் தொழில்நுட்பவியல் கல்விநிலையம் ஆகியன இணைந்து ஆபத்தான போதைப்பொருள்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்வை மன்னார்உயர்தொழில்நுட்பவியல் நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை நடத்தின.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இராணுவத்தின் 54ஆம் காலாட்படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் ஏ.எம்.சி. அபேகோன், லெப்டினன்ட் கேர்ணல் நளின் ஜயசுந்தர, மன்னார் உயர் தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தின் இயக்குநர் ஆர்.ஜே.மோகன் குரூஸ், விரிவுரையாளர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். நிகழ்வில் தேசிய ஆபத்தான போதைப்பொருள் கட்டுப்பாட்டு சபையின் வெளிச்சேவை அதிகாரி திருமதி எ.சியாமினி வைலெட் மூல வளப் பேச்சாளராகக் கலந்து கொண்டார். (ச-41-56)

# போராட்டக் காலத்தில் முஸ்லிம்கள்மீது இனச்சுத்திகரிப்பு இடம்பெறவில்லை!

## முன்னாள் எம்.பி. சிவமோகன் சுட்டிக்காட்டு

வவுனியா,நவ.10

முஸ்லிம் மக்கள்மீது இடம்பெற்ற சம்பவம் இனச்சுத்திகரிப்பு அல்ல. சுவஸ்திகா போன்றோர் புதுப்புது அர்த்தங்களைக்கூறி ஈழ விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தக்கூடாது என்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்களின் ஒரு நீண்டகால ஆயுதப்போராட்டம் முள்ளிவாய்க்காலில் இறுதிக்கட்டத்தை அடைந்தது. தமிழ் இளைஞர்களிடம் வலிந்து ஆயுதங்களைத் திணித்தது அரசாங்கங்களே. தற்போது பலரும் புதுப்புதுக் கதைகளைக்கூறி போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் அறிக்கைகளை விடுகின்றனர். சட்டத்தரணி சுவஸ்திகா என்பவர் முஸ்லிம்கள்மீது இனச்சுத்திகரிப்பு நடத்தப்பட்டதாக அறிக்கை விட்டிருந்தார்.

அது இனச்சுத்திகரிப்பு அல்ல எமது ஈழவிடுதலைப் போராட்டத்தின் ஒரு அங்கமாகவே நடைபெற்றது. முஸ்லிம்கள், தமிழர்கள், மலையகத்தமிழர்கள் ஆகிய நாங்கள் அனைவரும் தமிழ் பேசுகின்றோம். அந்த ரீதியில் ஒற்றுமையாகச் செயற்பட்டு எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். மாறாக மதவாதத்தைத் தூண்டி அதிலிருந்து அரசியலை வளர்க்க முயற்சிக்கவேண்டாம் - என்றார். (சு-110)

**காணி விற்பனைக்கு**

மீசாலையில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

077 794 8012

**காணி விற்பனைக்கு**

- நவக்கிரியில் 17 பரப்பு தோட்டக் காணி வெட்டுக் கிணற்றுடன் விற்பனைக்கு.
- 4 பரப்பு வீடு கட்டுவதற்குரிய காணியும் விற்பனைக்கு. (நிலாவரைக்கு அருகில்)

பிரதான வீதிக்கு அருகில்

தொடர்பு: 077 082 1010

(CS 59855) E



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.11. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org